Psychosocial Forum of Consortium of Humanitarian Agencies
CHA ISO 9001:2000 Certified

வெளியீடு V; இதழ் II - ஆவணி, 2008

# பிரதிபலிப்புக்கள்

## உளசமூகவியல் மன்று

அன்புடைய வாசகர்களுக்கு,

உளசமூக மன்றின் ‘பிரதிபலிப்புக்கள்’ எனப்படும் செய்திமடலின் இரண்டாவது பதிப்பினூடாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்! ‘உளசமூகத் துறையில் ஆற்றலைக் கட்டியெழுப்புவதில் இப்பதிப்பு முக்கிய கவனஞ்செலுத்துகிறது. ‘மாவட்டங்களில் உளசமூக முன்னெடுப்புக்கள்: புத்தளம் மற்றும் அனுராதபுரம், திருகோணமலை உளசமூக வலையமைப்பின் புத்தக வெளியீடு பற்றிய செய்தி அறிக்கை ஆகிய கட்டுரைகள் உளசமூகத் துறையில் ஆற்றலைக் கட்டியெழுப்புவது தொடர்பாக மாவட்ட உளசமூக வலையமைப்புகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்துக்கு சாட்சியங்களாக அமைகின்றன.

வழங்கப்படும் சேவையின் தரத்தை மேம்படுத்துவதில் அதிகரித்துவரும் விசேட கவனம் காரணமாக நடைமுறைப்படுத்தல் ரீதியாக இத்துறைசார் செயற்பாடுகளின் அளவு குறைவடைந்துள்ளதாகத் தென்படலாம்.

‘உள ஆரோக்கிய சேவைகளுக்கான சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட மாதிரியொன்று’ எனும் கட்டுரையும் இச்செய்திமடலில் இடம்பிடித்துள்ளது. இம்மாதிரியானது உளஆரோக்கிய சேவைகளை எவ்வாறு சமூகத்துக்கு எடுத்துச்செல்ல முடியுமென்பது பற்றியும், மருத்துவ உதவி தேவைப்படும் மக்களுக்கு ஆதரவளிப்பதற்கு குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறு ஈடுபாடு கொள்ள முடியுமென்பது பற்றியும் ஆழமான புரிந்துணர்வை வழங்குகிறது.

‘மாத்தறை மாவட்டத்தில் தற்கொலை முயற்சி பற்றிய அளவை ஆய்வு’ மற்றும் ‘உளசமூகவியல் செயற்பாடுகள் - விமர்சனமும் சாதனையும்’ ஆகிய தலைப்புக்கள் இலங்கையின் தென்பகுதியில் நிலவும் பிரச்சினைகளில் நாட்டம் கொண்டுள்ளவர்களின் சிந்தனைக்கு விருந்தாக அமைகின்றன.

தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் மேற்கொள்ளப்படும் உளசமூக மன்றின் இற்றைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் பற்றியும் ஆராயப்படுகின்றது. நீங்கள் ஏற்கனவே தெரிந்துகொண்டுள்ளவாறு உளசமூகத் துறைசார்ந்த தகவல்கள், புதிய அறிவு, கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை பகிர்ந்துகொள்ளக்கூடிய மேடையாகவும் இச்செய்திமடல் அமைகிறது. CHA யின் உளசமூக மன்று, அதன் உறுப்பினர்கள் மற்றும் தனியாட்கள் முன்னேற்றம் தேவைப்படும் துறைகளில் தமது சிந்தனைகளையும் கருத்துக்களையும் பகிர்ந்துகொள்வதை மனப்பூர்வமாக வரவேற்கிறது.

இறுதியாக இச்செய்திமடலுக்கு கட்டுரைகள், மொழிபெயர்ப்புக்கள் மற்றும் புதிப்பித்தல் என்பன மூலம் பங்களிப்பு செய்த அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிசன்சலா குணசேகரா
இதழாசிரியர்

# உளஆரோக்கிய சேவைகளுக்கான சமூகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள மாதிரியொன்று

பின்லாந்து மற்றும் அயர்லாந்து அரசாங்கங்கள் மற்றும் அ.சா. நிறுவனமான வேர்ல்ட் விஷன், அவுஸ்திரேலியா போன்ற சர்வதேச நன்கொடையாளர்களின் ஆதரவுடன் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உள ஆரோக்கிய அணியானது, இலங்கையில் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட உளஆரோக்கிய செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசாக்கு அமைச்சுக்கு ஆதரவை வழங்குகிறது. இச்செயற்பாடுகளின் சிறந்த பெறுபேறுகளுக்கு ஓர் உதாரணமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனையை எடுத்துக்கொள்ளலாம்.

கல்முனை யூன் 16 - இலட்சுமியின் தாயார் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை ஆதார வைத்தியசாலையிலுள்ள உளஆரோக்கிய தீவிர சிகிச்சைப் பிரிவிலுள்ள ஒரு நோயாளியாவார். இம்மாவட்டம் 2004ஆம் ஆண்டின் சுனாமிப் பேரலையினால் மிகமோசமான அழிவுக்குள்ளான பிரதேசங்களுள் ஒன்றாகும். வைத்திசாலையின் உளஆரோக்கிய அணியின் உதவியைப் பெற்றுக்கொள்ளத் தொடங்கியதிலிருந்து இலட்சுமியின் தாயாரின் உடநலம் ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டிருப்பினும் இன்னமும் அவர் பூரணமாக குணமடையவில்லை. “எங்களுடைய தாயார் குணமடைவதையிட்டு நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.. அத்துடன் எனது இளைய சகோதரியும் நானும் 24 மணிநேரமும் வைத்தியசாலையில் தங்கியிருந்து எமக்குத் தேவையானபோது தாதிமார்களைக் கலந்தாலோசிப்பதற்கு எமக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது” என இலட்சுமி கூறினார். இந்த வாட்டில் தங்கியிருக்கும் நோயாளிகளின் குடும்பங்களுக்கும் தங்குமிட வசதி வழங்கப்பட்டுள்ளது.

கல்முனை மாவட்டத்திலுள்ள மூன்று உளமருத்துவ சமூகப்பணியாளர்களில் ஒருவரான ஹமீன் என்பவர் “நோயாளிகள் தீவிர சிகிச்சை வாட்டில் தங்கியிருக்கும் போது அவர்களின் குடும்பங்களுடனான தொடர்புகளைப் பேணுதல் உண்மையிலேயே முக்கியத்துவம் வாய்ந்ததென்பதால், அவர்களின் உறவினர்கள் அவசியமான வேளைகளில் வைத்தியசாலையில் தங்கியிருக்கக்கூடிய ஒழுங்குகளைச் செய்கிறோம்” எனக் குறிப்பிடுகிறார். பொதுவாக தீவிர சிகிச்சை வாட்டில் நோயாளிகள் இரண்டு வாரங்களுக்கு மேல் தங்கியிருப்பதில்லை. இவர்கள் தமது உளநோய் தீவிரமடையும் கட்டங்களிலேயே தங்கியிருக்கின்றனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக் கிளையின் ஆதரவுடன் நாட்டிலேயே பூரணமான உள ஆரோக்கிய சேவைகளிலொன்றை கல்முனை ஆதார வைத்தியசாலையில் நிறுவியமைக்கு நன்றிகள் உரித்தாகட்டும். வைத்தியசாலையில் வழங்கப்படும் உளஆரோக்கிய சேவைகளைத் தவிர, வைத்தியசாலைக்கு வரமுடியாத மாவட்டத்தின் தூரஇடங்களைச் சேர்ந்த நோயாளிகளுக்காக சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பதுடன், மாவட்டம் முழுவதிலும் பரந்து காணப்படும் 43 உளஆரோக்கிய சமூக ஆதரவு உத்தியோகத்தர்களூடாக உளஆரோக்கிய தொடர்பராமரிப்பும் வழங்கப்படுகிறது. தீவிர வாட்டிலிருந்து ஏற்கனவே வெளியேற அனுமதிக்கப்பட்ட நோயாளிகளை இவர்கள் கிரமமாகச் சென்று பார்வையிடுகின்றனர். எனினும் இன்னமும் இவர்களுக்கு கிரமமான பரிசீலனை தேவைப்படுகிறது.

தொடர்ச்சி பக் 2

## உள்ளே....


| | |
|---|---|
| உளஆரோக்கிய சேவைகளுக்கான சமூகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள மாதிரியொன்று | பக் 1 |
| மாவட்ட உளசமூகவியல் முன்னெடுப்புக்கள் : புத்தளம், அனுராதபுரம் | பக் 3 |
| உளசமூக மன்றத்தின் (PSF) செயற்பாடுகள் | பக் 4 |
| ‘விமரிசனமும் சாதனையும்’ | பக் 6 |
| மாத்தறை மாவட்டத்தில் தற்கொலை முயற்சிகள் பற்றிய அளவை ஆய்வு | பக் 8 |
| புத்தக வெளியீட்டு விழா | பக் 11 |

# உளஆரோக்கிய...

*1 ம் பக்கம் பார்க்க*



கல்முனையில் இடம்பெற்ற சமூக ஆதரவு உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறியின் போது

கல்முனை ஆதார வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை வாட்டிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்ட நோயாளிகளில் ஒருவரான மோகன் என்பவர் சமூக ஆதரவு உத்தியோகத்தர்களின் தொடர்பராமரிப்புக்கான வருகையின் போது, நிச்சயமான முன்னேற்றத்தைக் காட்டினார். “இப்போ நான் எவ்வளவோ சுகமாயிருக்கிறேன். என்னுடைய தொழிலான தையல் வேலைக்கு மீண்டும் செல்லக்கூடியதாயிருப்பதுடன், மிக விரைவில் திருமணம் செய்யவும் போகிறேன்” என மோகன் கூறினார்.

“எனது மருந்துகளை நான் கிரமமாகச் சாப்பிடுகின்றேன். எனக்கு யாதேனும் உதவி தேவைப்படும்போது சமூக ஆதரவு உத்தியோகத்தர்கள் எனக்கு உதவுகிறார்கள்” என தொடர்ந்தும் கூறினார். கல்முனை பிரிவில் பணியாற்றும் 43 சமூக ஆதரவு உத்தியோகத்தர்களுக்கு உளஆரோக்கிய பிரச்சினைகள் மற்றும் வைத்தியசாலையிலுள்ள மருத்துவ நிபுணர்களிடம் நோயாளிகளை வழிப்படுத்துதல் என்பன பற்றி நிபுணர்கள் அணியொன்று பயிற்சியளித்தது. மேலும் இவர்கள் உளஆரோக்கிய உதவி தேவைப்படும் புதிய நோயாளிகளை இனங்கண்டு அவர்களை வழிபடுத்துவதிலும் சமூகங்களுடன் மிக நெருக்கமாக இணைந்து பணியாற்றுகின்றனர்.

“சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையானது மிகச்சிறந்த பெறுபேறுகளைத் தருகிறது. எதிர்வரும் மாதங்களில் இதனைத் தொடருவதற்கு நாங்கள் எதிர்பார்க்கிறோம்” என ஹமீன் தனது கருத்தைக் கூறினார்.

தீவிர சிகிச்சை வாட்டில் தொடர்ந்தும் தங்கியிருக்கவேண்டிய தேவையைக் கொண்டிராத, ஆனால் செல்வதற்கு வீடில்லாத அல்லது இவர்களுக்கு ஆதரவளிக்க குடும்ப உறுப்பினரொருவரும் இல்லாத நோயாளிகளுக்கும் ஆதரவளிப்பதற்கு எமது சேவைகளை விரிவுபடுத்துகிறோம்” என தொடர்ந்தும் கூறினார். புதிய புனர்வாழ்வு நிலையமொன்று கல்முனை பிரிவில் யூலை மாதத்தில் திறக்கப்படவுள்ளது. இங்கு வீடுகளில்லாத தீவிர சிகிச்சை வாட்டின் முன்னாள் நோயாளிகள் 20 பேர் வரை அதிகூடிய காலப்பகுதியான 6 மாதங்களுக்கு தங்கியிருக்க முடியுமென்பதுடன், அக்காலப்பகுதியில் தொழில் பயிற்சி மூலம் தொழில் திறன்களையும் பெற்றுக்கொள்ள முடியும். இதன் நோக்கம் இவர்களை தங்களில் மட்டுமே தங்கியிருக்கக்கூடிய மக்களாக மீண்டும் சமுதாயத்துடன் புனரிணைவதற்கு ஆயத்தப்படுத்தலாகும்.

இலங்கை மக்கள் குடித்தொகையின் ஏறக்குறைய மூன்று சதவீதத்தினர் யாதேனுமொருவகை உளநோயினால் அவதியுறுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தீவின் பெரும் எண்ணிக்கையான மக்கள் உளநோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளமைக்கு வறுமை, அதிகளவு மதுபானப்பாவனை, 2004 இல் நிகழ்ந்த சுனாமி காரணமாக ஏற்பட்ட உளஅதிர்ச்சியின் விளைவுகள் மற்றும் நாட்டில் இடம்பெறுகின்ற பெருமளவிலான வன்முறைகள் (இலங்கையில் மூன்று தசாப்தங்களாக இடம்பெறுகின்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக) என்பன காரணங்களாகவுள்ளன. இதன் விளைவாக உலகில் அதியுயர்ந்தளவு தற்கொலை வீதங்களைக் கொண்டுள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

இம்மாதிரியான சூழ்நிலை காணப்பட்ட போதிலும் உளஆரோக்கிய சேவைகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டும், நாடு முழுவதிலும் சமமற்ற முறையிலும் காணப்படுகின்றன. மிகப் பெருமளவிலான சேவைகள் தலைநகரான கொழும்பைச் சூழவுள்ள மூன்று பெரிய உளநோய் வைத்தியசாலைகளிலேயே குவிந்துள்ளன. நாட்டின் ஏனைய பகுதிகளில் - முக்கியமாக கிராமப்புறங்களில் உளஆரோக்கிய சேவைகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டனவாக அல்லது முற்றிலுமே வழங்கப்படாத நிலைமையே காணப்படுகின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏழு மாவட்டங்களில் (காலி, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கல்முனை, களுத்துறை, மாத்தறை, மட்டக்களப்பு) உளஆரோக்கிய சேவைகளை விருத்திசெய்வதில் உலகசுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கிளை பின்லாந்து, அயர்லாந்து அரசாங்கங்கள் மற்றும் வேர்ல்ட் விஷன் அவுஸ்திரேலியா ஆகியவற்றின் உதவியுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசாக்கு அமைச்சுக்கு வழங்கிவரும் ஆதரவுக்காக இவற்றுக்கு நன்றிகள் உரித்தாகட்டும். சேவைகள் விருத்திசெய்யப்பட்டதும் அமைச்சு இறுதியாக தொடர்ந்தும் தொழிற்படுவதற்குரிய செலவினங்களை ஏற்றுக்கொள்ளும்.

மத்திய, வட மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஏறக்குறைய 11 மாவட்டங்களில் உளஆரோக்கிய சேவைகள் கிடைப்பதில்லை. இலங்கையின் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வதிவிடப்பிரதிநிதியான Dr. Agostino Borra என்பவர் “இப்பிரதேசங்களில் உளஆரோக்கிய சேவைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு உலகசுகாதார ஸ்தாபனத்துக்கு சர்வதேச நன்கொடையாளர்களின் ஆதரவு மிகவும் அதிகமாகத் தேவைப்படுகிறது” எனக் குறிப்பிட்டுள்ளார். “கல்முனை பிரிவு போன்ற பகுதிகளில் உள ஆரோக்கிய சேவைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுதலானது, இச்சேவைகள் தேவைப்படும் நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் சர்வதேச ஆதரவுடன் புதிய சேவைகளை வெற்றிகரமாக விருத்திசெய்யமுடியுமென்பதை நிரூபிக்கிறது” எனவும் கூறியுள்ளார்.

தாழ் மட்டத்திலிருந்து நடுத்தர வருமானம் வரை பெற்றுக்கொள்ளும் 152 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அளவை ஆய்வொன்று, உலகில் இலங்கை, சிலி, பிரேசில் ஆகிய மூன்று நாடுகள் மாத்திரமே தேசிய மட்டத்திலான உளஆரோக்கிய தலையீடுகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளமையை காட்டியுள்ளன. “உலக சுகாதார ஸ்தாபனத்தின் (இலங்கை) இலக்கானது இம்மாதிரியான போக்கை தொடருவதன் மூலம் ஏனைய நடுத்தர மற்றும் தாழ்வான வருமானங்களைக் கொண்ட நாடுகளும் பின்பற்றக்கூடியதான உளஆரோக்கிய சேவை மாதிரிகளை நிறுவுதலாகும்” என Dr. Borra கூறிமுடித்தார்.

(அந்தரங்க தன்மைக்கு மதிப்பளிக்கவேண்டியிருந்தமையால் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட உண்மையான பெயர்களுக்குப் பதிலாக வேறுபெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன).

# மாவட்ட உளசமூகவியல் முன்னெடுப்புக்கள் : புத்தளம், அனுராதபுரம்

முரண்பாடுகளும் இயற்கை அனர்த்தங்களும் வாழ்க்கையின் முக்கியமான பகுதியாகிவிட்ட இன்றைய உலகளாவிய சூழ்நிலையில் உளசமூக ஆதரவளித்தல் குறிப்பிடத்தக்களவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பணியாகவுள்ளது. யுத்தம் காரணமாக சிறப்பாக நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களிலும், அதே போன்று இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் மக்கள் வாழும் இலங்கையில் இது இரு மடங்கு விளைவைக் கொண்டுள்ளது.

இனங்களுக்கிடையிலான முரண்பாடானது மக்களிடையே உளவியல் மற்றும் உணர்ச்சி என்பன ரீதியான சீர்குலைவை ஏற்படுத்தியுள்ளது. எனவே சமூகச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இயலுமான இடங்களில் ஒரு பொதுவான பணியிலக்கை நோக்கி முன்னேறுவதற்கும், தொடரும் முரண்பாடு மற்றும் வன்முறை என்பவற்றால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு பரந்தளவிலும் பயனுறுதிமிக்க விதத்திலும் பிரதிபலிப்பைக் காட்டுவதற்காகவும் உளஆரோக்கிய அலகுடன் ஒன்றிணைந்து பணியாற்றுதல் இன்றியமையாத தேவையாக உள்ளது.

இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள சமூக உறுப்பினர்கள் மத்தியில் இடம்பெறும் உளசமூக ஆதரவளித்தல் மற்றும் வழிப்படுத்தல் முறைமை (referral system) என்பன தரம் குன்றிய நிலையிலேயே இருப்பது அறியப்பட்டுள்ளது. எனவே, உளசமூகவியல் பங்காளிகளும் ஒட்டுமொத்த சமூகமும் மாவட்ட மட்டத்தில் எவ்வாறு தாங்கள் உளசமூக உதவியைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பது பற்றி தெரிந்துகொள்ள முடியாத மிகக்கடுமையான குழப்ப நிலையிலேயே உள்ளனர். எனவே அனுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உளசமூகப் பிரதிபலிப்பு வழிமுறையை உறுதிசெய்துகொள்வதற்காக பங்குதாரர்கள் ஒருங்கிணைப்பையும் வழிப்படுத்தல் முறைமையையும் வடிவமைப்பதன் மூலம் சமூக உறுப்பினர்கள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்வதற்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

அனுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களிலுள்ள பாதிப்புக்குள்ளான சமூகங்களுக்கு விரிவானதும் பயனுறுதி வாய்ந்ததுமான பிரதிபலிப்பை வழங்குவதற்காக சமூகச்செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் அரச-சார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்துடன், சிறப்பாக உளஆரோக்கிய அலகுடன் ஒன்றுகூடிப்பணியாற்றுதல் இன்றியமையாததாகும். மேலும் இலக்காகக் கொள்ளப்பட்ட பயனாளிகள் அதியுயர்ந்தளவில் பயனடைவதற்கு உளசமூகச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த விரும்பும் முகவரமைப்புகளிடையே ஒருங்கிணைப்பு அத்தியாவசியமாகும்

யுனிசெப்பின் அனுசரணையுடனும், மாவட்ட செயலகங்கள், NIBM, DCDC ஆகியவற்றின் பங்காளித்துவத்துடனும் இலங்கை சைல்ட் விஷன் (Child Vision, Sri Lanka) அனுராதபுரம் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் 50 உளசமூக ஆதரவுப் பணியாளர்களுக்கு (அரசாங்க மற்றும் அ.சா நிறுவனப்பணியாளர்கள்) பயற்சியளித்தது. இதனைத் தொடர்ந்து, அங்கத்துவ நிறுவனங்களையும் கருத்தில் கொண்டு சமூகத்தினருக்கு தேவையானவற்றை வழங்குவதற்காக 2007 மார்ச், ஏப்ரில் மாதங்களில் ஓர் மாவட்ட உளசமூகவியல் மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது இரு மாவட்டங்களிலுமுள்ள மாவட்ட உளசமூகவியல் மன்றங்களும் தேசிய மன்றமாகிய மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்புடன் (CHA) இணைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட உளசமூகவியல் மன்றத்தின் (DPSF) முக்கிய குறிக்கோள்களாவன :

- புத்தளம் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் உளசமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், பிராந்தியக் குழுக்கள், சர்வதேச முகவரமைப்புகள் மற்றும் கருத்திட்டங்கள் ஆகியவற்றுக்கிடையிலான வலையமைப்பையும் ஒருங்கிணைப்பையும் பலப்படுத்துதல்.
- மேலதிக நிபுணத்துவ ஆதரவு தேவைப்படும் மக்களுக்கு தொழிற்படும் வழிப்படுத்தல் மற்றும் தொடர் நடவடிக்கை என்பவற்றுக்கான முறைமையொன்றை விருத்தி செய்தல்.
- புத்தளம் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்களின் உளசமூக நன்னிலையை மேம்படுத்துவதற்கு செயல்திட்டமொன்றை விருத்தி செய்தல்.
- உளசமூகப் பணியிலும் தலையீடுகளிலும் முன்னேற்றகரமான / சமகால கருத்தியல்கள் பற்றி கலந்துரையாடுவதற்கும் பரிமாறிக்கொள்வதற்கும் மேடையொன்றை அமைத்துக் கொடுத்தல் மற்றும்.
- நிறுவனங்களின் பணிகளையும், மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளின் தேடல் முடிவுகளையும் பங்குபற்றுபவர்கள் பகிர்ந்து கொள்வதற்கு நடுநிலையான இடத்தை ஒழுங்கு செய்தல்.
- பல்வேறு அரச மற்றும் அரசசார்பற்ற துறைகளையும் சேர்ந்தவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள புத்தளம் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட உளசமூகவியல் மன்றங்கள் பின்வருவன உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக மிகநெருக்கமாக இணைந்து பணியாற்றுகின்றன :

பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட வன்முறை.

- போதைப் பொருட்களின் துர்ப்பாவனை.
- சிறுவர் துஷ்பிரயோகம்.
- சிறுவர் ஊழியமும் பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்திக்கொண்டவர்களும் - பங்குபற்றியவர்கள் இவற்றை முன்னுரிமையளிக்கப்பட வேண்டிய விடயங்களாகக் கருதினர்.
- மாவட்ட சிறுவர் பாதுகாப்பும் அபிவிருத்தியும் மற்றும்.
- சமூக அபிவிருத்தி.

இந்த இரு மாவட்டங்களின் மன்றங்களும் சமூக மற்றும் பாடசாலை மட்டங்களில் தமது சேவைகளை விரிவுபடுத்தி பல்வேறு ஆதரவளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்கும் திட்டமிடுகின்றன. எதிர்காலத்துக்குரிய திட்டங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன :

1. பாடசாலை மட்டத்தில் பிள்ளைக்கு உதவுவதற்காக எவற்றைச் செய்ய முடியும்?
2. சமூகநீதியில் ஆதரவளித்தல்
3. சமூகப் பணியை மேற்கொள்ளும் நிறுவனம் என்ற முறையில் எவற்றைச் செய்ய முடியும்?
4. சமூகத்தில் நிகழும் வீட்டு வன்முறை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றை அதிகுறைந்தளவுக்கு கொண்டுவருதலும், இவற்றின் மூலம் பாதிக்கப்படும் பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாத்தலும்.
5. பாடசாலைகள், சமூகங்கள் போன்ற பல நிறுவனங்களைச் சேர்ந்த மாவட்ட உளசமூகவியல் மன்ற உறுப்பினர்கள் மூலமாக சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், சரியான போசாக்கு, துஷ்பிரயோகத்தைத் தடுத்தல் என்பன சார்ந்த அடிப்படை உரிமைகள் பற்றி அவர்களுக்கு கற்பித்தல்.

# உளசமூக மன்றத்தின் (PSF) செயற்பாடுகள்

மே 23 மற்றும் யூன் 20 ஆகிய தினங்களில் உளசமூகவியல் பொதுக்கூட்டங்கள் மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பில் (CHA) இடம்பெற்றன. வருடம் இருமுறை இடம்பெறும் உளசமூகவியல் மீளாய்வுக் கூட்டமும் 2008 யூலை 25ஆம் திகதி இடம்பெற்றது.

இவற்றோடு பின்வரும் செயற்குழுக்கூட்டங்களும் நடாத்தப்பட்டன:

- மே 14, யூன் 14 மற்றும் 15, யூலை 09 ஆகிய தினங்களில் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான செயற்குழுக்கூட்டங்கள்
- மே 14 இல் பிராந்திய முன்னெடுப்புகளுக்கான செயற்குழுக்கூட்டம்

ஒன்றிணைந்து ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான முன்னெடுப்புக்கள் சம்பந்தமாக CHA மற்றும் சமுத்தான ஆகியவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைவாக பின்வரும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன :

- **யூன் 18** – 'முதியவர்களுடன் உளவியல் ரீதியாக பணியாற்றுதல் (முதியோரில் உளவியல் பிரச்சினைகள்) பற்றிய பயிற்சிப் பட்டறை Dr.அட்டறியன் லிற்றில் (Consultant Clinical Psychologist-South London and Maudsley Foundation Trust) அவர்களால் கொழும்பு சமுத்தான நிலையத்தில்.
- **யூலை 02** – 'உளஆரோக்கியப் பணியில் தொடர்பாடல் திறன்கள் (மதிப்பீடுகள்/ஆலோசனை வழங்கல் மற்றும் உளமருத்துவ சிகிச்சையளித்தல்)- பற்றிய பயிற்சிப்பட்டறை இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்களான Dr.கிறிஸ் பாக்கர் மற்றும் Dr.நான்சி பிஸ்ற்றாங் ஆகியோரால் கொழும்பு சமுத்தான நிலையத்தில்
- **யூலை 09** – 'மதுபானம் மற்றும் போதைப்பொருட்களின் துர்ப்பாவனை' பற்றிய பயிற்சிப்பட்டறை உளமருத்துவர்களுக்கும் உளவியலாளர்களுக்குமான இலண்டன் கிங்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஆலோசனை கூறும் சிகிச்சை உளவியலாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான Dr.ஷமில் வணிகரத்ன அவர்களால் கொழும்பு சமுத்தான நிலையத்தில்
- **யூலை 15** – 'மத்திய கிழக்கில் தொழில் பார்த்த பின்னர் மீளவும் இணைந்துகொள்ளும் இலங்கையைச் சேர்ந்த பணிப்பெண்களின் உளஆரோக்கியப் பிரச்சினைகள் பற்றிய ஆய்விலுள்ள பிரச்சினைகள்' பற்றிய உரையொன்று இலண்டன் Susan Salas Consulting Ltd. ஐச் சேர்ந்த முகாமைத்துவ ஆலோசகரும் ஆய்வாளருமான செல்வி சுசன் சலஸ் அவர்களால் கொழும்பு சமுத்தான நிலையத்தில் நிகழ்த்தப்பட்டது˙
- **யூலை 21** 'மதுபானம் மற்றும் போதைப்பொருட்களின் துர்ப்பாவனையைக் கையாளுதல்' பற்றிய பயிற்சிப் பட்டறை இலண்டன் கிங்ஸ் கல்லூரியைச் சேர்ந்த உளவியல் சிகிச்சையளித்தலில் ஆலோசனை கூறும் நிபுணரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான Dr. ஷமில் வணிகரத்ன அவர்களால் "Rebuilding Lives Project" ஐச் சேர்ந்த ஆலோசகர்களுக்கென சீனிகமவில் பிரத்தியேகமாக நடாத்தப்பட்டது.
- **யூலை 22** - 'துர்ப்பாவனைக்கு அடிமையாதல்' (Addictions) பற்றிய பயிற்சிப் பட்டறை இலண்டன் கிங்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஆலோசனை கூறும் சிகிச்சை உளவியலாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான Dr.வணிகரத்ன அவர்களால் அம்பாந்தோட்டை சமுத்தான நிலையத்தில்
- **2008 யூலை 25** மதுபானம் மற்றும் போதைப்பொருள்களின் துர்ப்பாவனையை கையாளுதல் பற்றிய பயிற்சிப்பட்டறை பிரத்தியேகமாக சக்தி நிகேதன ஆலோசனை வழங்குபவர்களுக்கு

பிராந்திய முன்னெடுப்புக்களை வலுப்படுத்துவதற்கான பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பங்களிப்புகள் மேற்கொள்ளப்பட்டன:

### காலி

- யூலை 06 – 'உடன்பாடான மனப்பாங்குகளுடன் உடன்பாடான பணியாற்றும் சூழலில் எவ்வாறு பணிபுரிதல் வேண்டும்' என்னும் நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றது˙
- யூலை 09 – 'மதுபானம் பற்றிய விழிப்புணர்வு' என்னும் நிகழ்ச்சித் திட்டமும் வீதியோர நாடகமும் கரந்தேனியாவில் நடாத்தப்பட்டன˙
- யூன் 24 – 'உள ஆரோக்கியம் பற்றிய உணர்வூட்டல்' பற்றிய ஆற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம் இடம்பெற்றது˙
- காலி – பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் உளசமூகவியல் மன்ற கூட்டம் இடம்பெற்றது.

### அம்பாந்தோட்டை

- யூலை 28 – 'பிள்ளையொன்றின் அசாதாரண நடத்தையை எவ்வாறு இனங்கண்டுகொள்வது மற்றும் 'சிறுவர் கல்வி அபிவிருத்தி முறைகள்' ஆகியன பற்றிய பட்டறையொன்று முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட்டது˙
- உளசமூகவியல் உத்தியோகத்தரால் அம்பாந்தோட்டை பிரிவு மட்டத்திலான ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன :
  - யூன் 24 – திஸ்ஸ மாரா மற்றும் லுணுகம்வெகெர
  - யூன் 30 – தங்காலை மற்றும் வீரகெற்றியர்
  - யூலை 14 – சூரியவெவ, அம்பலாந்தோட்டை மற்றும் அம்பாந்தோட்டை

### யாழ்ப்பாணம்

- செய்திமடலின் இரண்டாவது பதிப்பு தொகுக்கப்படுகிறது. இது விரைவில் வெளியிடப்படவுள்ளது.

### மாத்தறை

- 'உளமருத்துவப் பிரச்சினைகளை இனங்கண்டு-கொள்ளுதல்' பற்றிய ஆற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டமொன்று யூலை 31 மற்றும் ஆகஸ்ட் 07 ஆகிய தினங்களில் 'சமன்மல்' மண்டபத்தில் இடம்பெற்றது.

- யூலை 31 - உளசமூகவியல் மன்றத்தின் கூட்டமொன்று மாத்தறையில் CHA மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது.



**மொனறாகலை**

- யூலை 02, 03 - இப்பகுதியிலுள்ள உளசமூகவியல் பணியாளர்களை இனங்கண்டு கொள்வதற்காக குழுவொன்று உருவாக்கப்பட்டது.

**பதுளை**

- ஏப்ரில் 05 - ஹல்தமுல்ல The White Cross Network இனால் 23 முன்-பள்ளி ஆசிரியர்களுக்கு 'முன்பள்ளி அபிவிருத்தியில் அணியைக் கட்டியெழுப்புதல்' என்னும் கருப்-பொருளில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது.
- 'முன்பிள்ளைப்பருவ விருத்தி, சிறுவர்களும் அபிவிருத்தியும் மற்றும் நுண்ணறிவு விருத்தி பற்றிய மனப்பாங்குகள்' என்பன பற்றிய இரு நிகழ்ச்சித் திட்டங்கள் ஹாலி எலவைச் சேர்ந்த 15 முன்-பள்ளி ஆசிரியர்களுக்கும் பண்டாரவளையைச் சேர்ந்த 08 முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஏப்ரில் 07, 03 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டங்கள் சாமசேவய உடன் கூட்டாக நடாத்தப்பட்டது.
- மே 10 – பதுளை சர்வோதய உடன் கூட்டாக 20 இளைஞர்களுக்கு தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது.
- மே 31 - இளைஞரின் சமூக நடத்தையும் பொறுப்புணர்வும் பற்றிய பயிற்சி வேளையொன்று உள்ளிட்ட தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டமொன்று 16 இளைஞர்களுக்கு நடாத்தப்பட்டது.

**உளசமூகமன்றின் பொதுக் கூட்டங்கள் மாதத்தின் 3ம் 4ம் வெள்ளிக்கிழமைகளில் காலை 10 மணிக்கு CHA யில் நடைபெறும்.**

**CHA** யின் உளசமூகத்துறை மன்றுடன் இணைந்து கொள்வதற்குத் தொடர்பு கொள்ளவேண்டியது:
ஒருங்கிணைப்பாளர் உளசமூகத்துறை
மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு **(CHA)**
86, றொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 07
தொலைபேசி: 4610943 ext:133
மின்னஞ்சல்: psfcoord@cha.lk

## மாவட்ட உளசமூகவியல் முன்னெடுப்புக்கள் : புத்தளம், அனுராதபுரம்...

6. மாவட்ட உளசமூகவியல் மன்ற உறுப்பினர்களுடன் ஒன்றுசேர்ந்து சமூகத்தின் அடிமட்டத்துக்கு உளசமூகவியல் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை விரிவுபடுத்தல்.

மேற்படி இரு மாவட்டங்களிலும் மாவட்ட உளசமூகவியல் மன்றங்கள் உருவாக்கப்பட்டு, உறுப்பினர்களிடையே பொருத்தமான ஒருங்கிணைப்பு ஏற்பட்டுள்ள போதிலும், இம்மன்றங்களை வலுப்படுத்துவதற்கு கூடுதலான விழிப்புணர்ச்சி இன்னமும் தேவைப்படுகிறது. நிகழ்வுகளை மாற்றியமைக்கக்கூடியவாறான பங்குபற்றுதலுக்கும் , செயற்பாடுகளை நடாத்துவதற்கும் அல்லது ஒழுங்கமைப்பதற்கும் இம்மன்றங்களுக்கு கிரமமான ஊக்குவிப்பும் அனுசரணையும் தேவைப்படுகிறது. தேசிய உளசமூகவியல் மன்றம், ஷேட் (SHADE) நிறுவனம் மற்றும் உளஆரோக்கிய அலகு என்பவற்றின் அனுசரணையோடு பல்வேறு வகையான செயற்பாடுகள், பட்டறைகள் என்பவற்றின் மூலம் சைல்ட் விஷன் (Child Vision) இந்த இரண்டு மாவட்டங்களிலும் மாவட்ட உளசமூகவியல் மன்றங்களின் ஆற்றலைக் கட்டியெழுப்பி, அதனை வலுப்படுத்துவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அரசாங்கம் மற்றும் அரசசார்பற்ற துறைகள் ஆகிய இரண்டிற்குமிடையே சமமானதும் சமநிலையிலுள்ளதுமான பங்காளித்துவத்தை நிலைநாட்டுவதன் மூலம் இரு மாவட்டங்களிலுமுள்ள உளசமூகவியல் மன்றங்களை வலுப்படுத்தி, மேலும் சிறந்த முறையில் தொழிற்படச் செய்ய முடியுமென்பதை சைல்ட் விஷன் உணர்ந்துகொள்ளுகிறது.

திரு.மு.ஆ. நஜீம்
உளசமூகவியல் ஒருங்கிணைப்பாளர்
சைல்ட் விஷன், இலங்கை

உளசமூகவியல் களப் பணியாளர் ஒருவரின் கண்ணோட்டத்தில்

# உளசமூகவியல் செயற்பாடு – 'விமரிசனமும் சாதனையும்'

இன்னும் எமது சமுதாயத்தில் நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகமட்ட அமைப்புக்கள், சமய நிறுவனங்கள் ஆகியவற்றின் ஈடுபாடு தொடர்பில் குற்றங்காணும் தன்மையொன்று உருவாவதை உணரக்கூடியதாயிருக்கிறது.

இம்மாதிரியான குற்றங்காணும் தன்மை காணப்படினும் அதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. பெருந்தொகையான பணத்தை வீண் செலவு செய்து கலந்துரையாடல்களை கொழும்பு நகரின் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் நடாத்தி, கிராமப்புறங்களிலுள்ள நிலைமைகள் பற்றிய அறிவு முற்றிலுமே இல்லாத மக்கள் அப்பிரதேசங்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைப்பதற்கான அறிக்கைகளைத் தயாரிப்பது பற்றி விமர்சகர்கள் தமது கடுமையான விமரிசனத்தை தெரிவிக்கின்றனர்.

இத்திட்டங்களை கிராம மட்டத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குரிய ஆற்றலின்மையும், திட்டமிடல் கட்டத்தின்போது எதிர்பார்க்கப்பட்ட கணிசமானளவு முன்னேற்றத்தை எய்துவதற்கு தவறி விடுவதுமே இம்மாதிரியான விமரிசனங்களுக்குரிய காரணங்களில் சிலவாகும்.

இலங்கையில் இம்மாதிரியான விமரிசனங்கள் எழுவதற்கு, நடைமுறையில் அடையக்கூடிய இலக்கை நோக்கமாகக் கொண்டிராத பல நடைமுறைப்படுத்த முடியாத கலந்துரையாடல்களே காரணமாகுமென வெளிநாட்டுத் தொண்டர்களுள் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

சமுதாயத்தில் அடையாளங்கண்டு கொள்ளப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்காக கலந்துரையாடல்களை நடாத்தினாலும், இவற்றை நடைமுறைக்கு கொண்டுவராதுவிட்டால் இக்கலந்துரையாடல்களில் பங்குபற்றியோர் ஊக்கமிழந்து விரக்தியடைவது எதிர்பார்க்கக்கூடிய நிகழ்வேயாகுமெனவும் குறிப்பிட்டிருந்தார்.

இம்மாதிரியான சூழ்நிலையில் துரிதமாக அபிவிருத்தியடைந்து வரும் அம்பாந்தோட்டையில் அரசாங்க, அரச சார்பற்ற நிறுவனங்களையும் சமூக மட்ட அமைப்புக்களையும் சேர்ந்தவர்களும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும் அம்பாந்தோட்டையை அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்கு ஒருங்கிணைந்தனர். இரு தடவைகள் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பின், ஏனைய அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளுக்கு ஓர் முன்னுதாரணமாக அமையக்கூடியவாறு அம்பாந்தோட்டை பட்டினத்தின் தோற்றத்தை அவர்களால் மாற்றியமைக்க முடிந்தது.



சுனாமிப் பேரலையினால் கொல்லப்பட்ட 34,000 மக்களுடன் ஒப்பிடுகையில் மதுபானப் பாவனையாலும் புகைபிடிப்பதனாலும் வருடாந்தம் 40,000 மக்கள் இறக்கின்றார்களென இலங்கையிலுள்ள உலக சுகாதார தாபனத்தின் புள்ளிவிபரங்கள் தெரியப்படுத்தியுள்ளன. வறுமையுடன் சம்பந்தப்பட்டுள்ள தவறுகளுக்கும் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம், குற்றங்களும் ஊழல்களும், வீதி விபத்துக்கள் ஆகியவற்றுக்கும் முக்கிய காரணங்களென இனங்காணப்பட்டவற்றுள் இவையும் அடங்குகின்றன. பங்குபற்றியவர்கள் இப்பிரச்சினைகளை தெளிவாக இனங்கண்டுகொண்டமையானது, உண்மையிலேயே மக்கள் இவற்றினால் அவதியுறுவதை எடுத்துக்காட்டுவதற்கானதோர் சான்றாக அமைகிறது எனலாம்.

கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்தபடியே பல கருத்திட்டங்களையும் வடிவமைப்பவர்கள் முக்கிய பிரச்சினையான வருடாந்தம் மரணிக்கும் 40,000 மக்கள் பற்றி எதுவுமே தெரியாது போன்று பாசாங்கு செய்வதனைச் சுட்டிக்காட்டும் கிராமப்புறங்களைச் சேர்ந்த மாற்றத்தைக் காண முயலும் மக்களின் கருத்துக்களை மிக இலகுவில் புறக்கணித்துவிட முடியாது. இவர்களும் கூட மறைமுகமாக இந்நிலைமைக்கு பொறுப்பாக இருப்பதுடன், இச் செயல்முறையில் ஓரளவுக்கு ஈடுபட்டுமுள்ளனர்.

இரு தடவைகள் இடம்பெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து மே மாதம் 31ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலக புகையிலை தவிர்ப்பு தினத்தை (Global Anti – Smoking Day) கொண்டாடுவதற்கா அம்பாந்தோட்டையில் மே மாதம் 29ம் திகதி நடைமுறைப்படுத்துவதற்காக, நிகழ்ச்சித் திட்டமொன்று வடிவமைக்கப்பட்டது. சிகரட் பாவனையால் மக்களுக்கு விளையக்கூடிய ஆபத்து பற்றி விளக்கமளிப்பதும், சிகரட் விற்பனையை அதிகுறைந்தளவாக்குவதுமே இதன் நோக்கமாக இருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டமானது, சிகரட்டை விற்பனை செய்யாத கடைகளை மதிப்பிட்டு அவற்றுக்கு சான்றிதழ்களை வழங்குவதுடன், அம்பாந்தோட்டை மக்களின் நலனை கருத்தில் கொண்டு இக்கடைகள் சிகரட் விற்பனையை தவிர்த்துக் கொண்டுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டும் அறிவித்தல் பலகையொன்றை



வழங்குவதையும் கொண்டிருந்தது. இதே போன்று , சிகரெட் பாவனையில் ஈடுபட்டிருந்த வியாபார நிலையங்களுக்கு சிகரெட் பாவனையின் கெடுதியான விளைவுகள் பற்றி எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், சிகரெட்டை விற்பனை செய்ய வேண்டாமென இவற்றுக்கு ஊக்கமும் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின்படி மே மாதம் 29ம் திகதி காலை 10 மணியளவில் அரசாங்க, அரசசார்பற்ற மற்றும் சமூக மட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிட்டத்தட்ட 100 பேர் அம்பாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒன்றுகூடினர். அம்பாந்தோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இவர்கள் பங்குபற்றியதற்காக நன்றியைத் தெரிவித்து, இவர்கள் மேற்கொண்டிருந்த பணி இனிது நிறைவேற வேண்டுமென வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள். இதனைத் தொடர்ந்து, இந்நிகழ்ச்சித்திட்டம் பொது சுகாதார பரிசோதகரினதும் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த உளவளத் துணையாளரினதும் வழிகாட்டலின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. 'பிரயத்தன' சபையின் வீதியோர நாடகக்குழுவினர் பங்குபற்றியமை இந்நிகழ்வுக்கு உற்சாகத்தை ஊட்டியது.

இரண்டரை மணித்தியாலங்களில் இவர்கள் ஏறக்குறைய 35 வர்த்தக நிலையங்களிலுள்ள மக்களுக்கு தீய விளைவுகள் பற்றிய அறிவைப் புகட்ட முடிந்தது. 19 கடைகள் ஏற்கனவே சிகரட் விற்பனையை நிறுத்தியதைத் தொடர்ந்து அவற்றின் சிறப்பான பணியை மதிப்பிட்டு அவற்றுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டமையைக் கண்ட மக்கள் உற்சாகமடைந்தனர். மக்களின் நன்மை கருதி கிட்டத்தட்ட 10 கடைகள் சிகரட் விற்பனை செய்யப்படுவதில்லையென்னும் செய்தியைத் தெரிவிக்கும் அறிவித்தல் பலகையை மக்களின் பார்வைக்கு வைக்கச் செய்யும் அதிகாரமும் இப்பங்குபற்றுநர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சித் திட்டம் முடிவடைந்த பின்னரும் கூட ஆர்வமிக்க பங்குபற்றுநர்கள் ஏனைய பகுதிகளிலுமுள்ள கடைச் சொந்தக்காரர்களுக்கு இத்தீய விளைவுகள் பற்றி புகட்டுவதற்காக தாங்களாகவே நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் காரணமாக இந்நிகழ்ச்சித் திட்டம் எதிர்பார்த்ததை விட கூடிய பயனுறுதித்தன்மை கொண்டதாக அமைந்தது. மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக, உளசமூக நிகழ்ச்சித் திட்டங்களின் வெற்றியை இலகுவில் அளவிட முடியாதென்பது போன்ற பெரிய அறிக்கைகளைத் தயாரிப்பதிலும் பார்க்க இம்மாதிரியான எளிமையான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் மேலும் சிறப்பாயிருக்குமென்பதை இந்நிகழ்வுக்கு சமூகமளித்திருந்த சகல மக்களும் உணர்ந்து கொண்டனர்.

பொது சுகாதார பரிசோதகருடன் கூடவே பிரதேச செயலகத்தைச் சேர்ந்த உளவளத்துணையாளர், வெளிநாட்டு தொண்டர் சேவை உத்தியோகத்தர் 'Our Home' சேவா லங்கா உளசமூக சேவைக் குழுவினர், Women's Main Counsil, Agromat Diri Piyasa 'பிரயத்தன' சபை, மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு, கெயர் ஸ்தாபனம் ஆகியனவும் பெயர் குறிப்பிடப்படாத ஏனைய பல நபர்களும் கூட இந்நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றிக்கு தங்களுடைய ஆதரவை நல்கினர். பிரசாத் ஜயசிங்க, உளசமூகவியல் ஒருங்கிணைப்பாளர், ஹம்பாந்தோட்டை – சமூக அபிவிருத்தி கூட்டமைப்பின் சார்பாக.

### சிகரட் விற்பனை மற்றும் பாவனை என்பவற்றை அதிகுறைந்தளவுக்கு கொண்டுவருவதற்கான நிகழ்ச்சித்திட்டம்.

**இலக்கு :**

துரிதமாக விருத்தியடைந்து வரும் அம்பாந்தோட்டை நகரில் போதைப்பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. இந்த அச்சுறுத்தலைத் தடுப்பதற்காக வர்த்தகர்கள் மத்தியில் வழிப்புணர்வை அதிகரிக்கச்செய்து, சிகரட் புகைத்தலை அதிகுறைந்தளவுக்கு கொண்டுவரும் நோக்கத்துடன் நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

**குறிக்கோள்கள்**

புகைபிடிப்பவர்கள் வெளிவிடும் சிகரட் புகையை சுவாசிப்பதனால் ஏற்படக்கூடிய தீங்கிலிருந்தும் நகரமக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் அவர்களது உரிமை பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கச்செய்தல்

- நகரத்தில் வாழும் இளைஞர்களிலிருந்து தெரிவுசெய்து குழுவொன்றை அமைத்தல் மற்றும்
- அறிவை மேம்படுத்துவதற்கு சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், அறிவித்தல் தாள்களை விநியோகித்தல்

**ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் முறைகள்**

- உத்தியோகத்தர்கள் வியாபார நிலையங்களுக்கும், ஏனைய நிறுவனங்களுக்கும் வருகை தந்து விழிப்புணர்வை அதிகரிக்கச்செய்தல்.
- மக்கள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரிக்கச்செய்வதற்காக வீதியோர நாடகக் குழுக்களை உருவாக்குதல்
- தொடரும் கண்காணிப்பு
- நகரத்தில் இரு வாரங்களுக்கு ஒரு தடவை நிலைமையை கண்காணித்தல்
- வர்த்தக சம்மேளனங்களின் தேவையானளவு பங்கு பற்றுதலை பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தை
- தேவைக்கேற்ப தொடரும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் சமயத்தலைவர்களை ஈடுபடுத்துதல்

**பங்குபற்றும் நிறுவனங்கள்**

- பிரதேச செயலகம் - அம்பாந்தோட்டை
- பொலிஸ் நிலையங்கள் - அம்பாந்தோட்டை
- பெண்களின் பிரதான சங்கம் - அம்பாந்தோட்டை
- சேவா லங்கா 'Our Home' உத்தியோகத்தர்கள் - அம்பாந்தோட்டை
- கெயர் நிறுவனம்
- 'பிரயத்தன' சங்கம் - அம்பாந்தோட்டை
- CHA – அம்பாந்தோட்டை

# மாத்தறை மாவட்டத்தில் தற்கொலை முயற்சிகள் பற்றிய அளவை ஆய்வு

இந்நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்றே மாத்தறை மாவட்டத்திலும் தற்கொலை வீதங்கள் உயர்வாகக் காணப்படுகின்றன. போதியளவு தரவுகள் கிடைக்காமையினால் இப்பிரச்சினையின் பரிமாணம் பற்றிய தெளிவானதோர் கருத்தைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. ஆரம்பத் தரவுகள் எவையுமின்றி உளஆரோக்கிய சேவைகளை வழங்குதல் ஒரு சவாலாக அமைந்துள்ளதுடன், தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு இத்தரவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையுமுண்டு.

இப்பிரச்சினையின் ஆபத்தான தன்மை பற்றி மதிப்பிடுவதற்காக 2007 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியின் போது மாத்தறை பொது வைத்தியசாலையின் வாட் பதிவேடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படைப் பகுப்பாய்வொன்று நடாத்தப்பட்டது. இதிலிருந்து பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன:

1. தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட அனைவரும் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்படவில்லை சிலருக்கு உள்ளூர் வைத்தியசாலைகளில் சிகிச்சையளிக்கப்பட்டது.
2. பதிவேடுகளைப் பேணுவதில் ஒரு சீரான தன்மை கடைப்பிடிக்கப்படவில்லையென்பதால் தகவல்களில் பாரிய வேறுபாடுகள் காணப்பட்டன.

மேலே தரப்பட்டுள்ள வரைபு இம்மாவட்டத்தின் நிலைமை மற்றும் வைத்திய அதிகாரிகளின் கட்டுப்படுத்தலுக்கான தலையீடு என்பன பற்றி தெரியப்படுத்துகிறது.




| | ஜன | பெப் | மார்ச் | ஏப்ரில் | மே | யூன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஆண் | 21 | 24 | 27 | 15 | 22 | 23 | 132 |
| பெண் | 11 | 19 | 32 | 22 | 47 | 23 | 154 |
| மொத்தம் | 32 | 43 | 59 | 37 | 69 | 46 | 286 |

## பால் நிலை

2007ம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியின் போது 132 ஆண்களும் 154 பெண்களுமாக 286 பேர் சேர்க்கப்பட்டனர்

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஆண், பெண் விகிதம் மே மாதத்தைத் தவிர ஏறக்குறைய ஒரே மாதிரியாகவே காணப்பட்டது. மே மாதத்தின்போது சேர்க்கப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை பெண்களினதும் பார்க்க அதிகரித்துக் காணப்பட்டது. தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட பெண்களின் சதவீதம் 54ஆகவும் இது ஆண்களைப் பொறுத்தவரை 46 ஆகவும் காணப்பட்டது.

## நஞ்சு வகைகள் பற்றிய உண்மைகள்

பெண்கள் தற்கொலை முயற்சிக்கு கையாண்ட முறைகள் :

பெரும்பான்மையானோர் ஏனைய நோய்களுக்கு பயன்படுத்தப்பட்ட மருந்துவகைகளை அளவுக்கும் அதிகமாக உட்கொண்டனர். மொத்தமாக 63 பேர் பரசெற்றமோலை பாவித்தனர். 20 பேர்களைப் பொறுத்தவரை எந்த வகையான நஞ்சு என்பது தெரிந்துகொள்ளப்படவில்லை. மிகச்சிலர் விவசாயத்துக்குப் பயன்படுத்தும் இரசாயனப் பொருட்களைப் பாவித்தனர்.

ஆண்கள் தற்கொலை முயற்சிக்கு கையாண்ட முறைகள் :

பெண்களுடன் ஒப்பிடுகையில் விவசாய இரசாயனப் பொருட்களைப் பாவித்த ஆண்களின் எண்ணிக்கை உயர்வாக இருந்தது. மொத்தமாக 22 பேர் பரசெற்றமோலைப் பாவித்தனர்.

| | |
|---|---|
| ஆண்கள் | 132 |
| பெண்கள் | 154 |
| மொத்தம் | 286 |



உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் - மாத்தறை மலிம்பட, தேவி நுவர என்பன தற்கொலை முயற்சி காரணமாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டோரின் அதியுயர்ந்தளவு எண்ணிக்கையைத் தெரியப்படுத்தின.

### விளக்கமளித்தல்

மேற்படி வரைபு பாதிக்கப்படக்கூடிய தன்மையை அதியுயர்ந்தளவு கொண்டிருப்பது 16 – 28 வயதுப் பிரிவு என்பதையும் , ஆண்களைப் பார்க்கிலும் சுலபமாக பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

கிராமப் புறங்களைப் பார்க்கிலும் நகரப்புறங்கள் கூடுதலான எண்ணிக்கை கொண்ட தற்கொலை முயற்சிகளைக் காட்டுகின்றன.

பெரும்பாலும் வீடுகளில் தடையின்றிப் பெற்றுக்கொள்ளக்கூடிய மருந்து வகைகளே பயன்படுத்தப்படுகின்றன.

வாழ்க்கைத் திறன்களை வலியுறுத்தும் தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் பாடசாலைகளில் தரம் 9 தொடக்கம் கல்வி பயிலும் மாணவர்களையும் பாடசாலைகளை விட்டு விலகியவர்களையும் இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்.




Dr.S. **அனுரா சந்திரசேனா**
வைத்திய அதிகாரி
மாத்தறை

நிகழ்வுகள்

# புத்தக வெளியீட்டு விழா
# "வலுவூட்டல் : உங்களூடாக சமூகத்துக்கு"

"வலுவூட்டல் : உங்களூடாக சமூகத்துக்கு" என்னும் நூலின் வெளியீட்டு விழா கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இவ்விழா யூன் 13ஆம் திகதி காலை 10.00 மணியளவில் பிரதம விருந்தினரான மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி. N.R. ரஞ்சனி அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்கள். சமூக சேவைகள், திணைக்களம், கல்வி நிறுவனங்கள், அ.சா.நிறுவனங்கள், மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு மற்றும் அ.சா நிறுவனங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

CENT ஒருங்கிணைப்பாளரான திரு. ஆனந்தராசா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். இதனைத் தொடர்ந்து உளமருத்துவ சமூகப் பணியாளரும், கைந்நூலின் இணை-ஆசிரியருமான திரு. மொகமட் அசாத் இக் கைந்நூலை அதன் படிப்படியான வளர்ச்சி, குறிக்கோள்கள் மற்றும் சிறப்பியல்புகள் என்பவற்றுக்கு முக்கியமளித்து பங்குபற்றியோருக்கும் விருந்தினர்களுக்கும் அறிமுகம் செய்துவைத்தார். இக்கைந்நூலின் இணை-ஆசிரியரும் வருகை தரும் உளமருத்துவருமான Dr.T.கடம்பநாதன் அவர்கள் இக்கைநூலின் முதலாவது பிரதியை பிரதம விருந்தினரிடம் கையளித்தார். அடுத்து பிரதம விருந்தினர் உரையாற்றினார்கள். இவர்கள் தமது உரையின் போது இக்கைந்நூலை ஆக்குவதில் பங்களிப்பைச் செய்த ஆசிரியர்களினதும் இதழாசிரியர்களினதும் முயற்சிகளை வெகுவாகப் பாராட்டியதுடன், திருகோணமலை மாவட்டத்திலும் அதற்கு வெளியேயுமுள்ள பரந்துபட்ட மக்கள் தொகுதிக்கு பயனுள்ள கருவியாக இருக்குமென்னும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்கள். CENT வலையமைப்பு உறுப்பினர்களுக்கும் தமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். இக்கைந்நூலின் இரண்டாவது பிரதியை திரு.மொகமட் அசாத் அவர்கள் கௌரவ விருந்தினரான திருகோணமலை பிராந்திய சுகாதாரப் பராமரிப்பாளரான Dr.E.G. ஞானகுணாளனிடம் கையளித்தார்கள்.



Dr.ஞானகுணாளன் அவர்கள் தமது உரையின்போது இதுவே திருகோணமலை மாவட்டத்திலிருந்து வெளியாகும் முதலாவது பயிற்சிக் கைந்நூலெனக் குறிப்பிட்டதுடன், PETRO மற்றும் CENT உடனான தமது ஐக்கியத்தையும் பரஸ்பர ஆதரவளித்தலையும் தெரிவித்தார்கள். VSOவின் (இது கைந்நூலின் வெளியீட்டுக்கு நிதியளித்தது). உளஆரோக்கியத் துறைக்குப் பொறுப்பாகவுள்ள நிகழ்ச்சித் திட்ட அதிகாரியான செல்வி அனுஷா தங்கக்கோன் அவர்கள் ஆசிரியர்களினதும் இதழாசிரியர்களினதும் முயற்சிகளை பாராட்டியதுடன், இம்மாவட்டத்தில் எதிர்காலத்தில் உளஆரோக்கிய சேவைகளை வலுப்படுத்துவதற்கு VSO உதவமுடியுமென்ற தனது நம்பிக்கையையும் தெரிவித்தார்கள். திருகோணமலை மாவட்டத்தில் நிறுவப்படவுள்ள இடைநிலைப் பராமரிப்பு நிலையம் (Intermediate Care Center) தொடர்பாக தமது வெளிக்கள பார்வையிடலின்போது பெற்றுக்கொண்ட தகவல்களையும் பகிர்ந்துகொண்டார்கள்.

கொழும்பு உளமருத்துவ நிறுவனத்தைச் சேர்ந்த Dr.சிவதாஸ் அவர்கள் ஆற்றிய உரை அனைவரினதும் கவனத்தைக் கவரக்கூடியதாயிருந்தது. Dr.சிவதாஸ் அவர்கள் 'Angoda – Through my lens' மற்றும் 'To be Healthy' (தமிழில்) என்பன உள்ளிட்ட பல நூல்களை எழுதியிருப்பதுடன், உளசமூகவியல் மற்றும் உளஆரோக்கிய விடயங்களில் பயிற்றுனராகவும் உள்ளார். இக்கைந்நூலின் தயாரிப்பின்போது நூலாசிரியர்களும் பதிப்பாசிரியர்களும் இணைந்து பணியாற்றியமைக்காகவும், தயாரிப்புக்கான முயற்சிகளை மேற்கொண்டமைக்கும் நேரத்தை செலவிட்டமைக்கும் தமது பாராட்டைத் தெரிவித்தார்கள். அதேவேளை பகுத்தாராயும் தமது கண்ணோட்டத்தில் இக்கைந்நூலிலுள்ள குறைபாடுகளான சுய-மதிப்பு மற்றும் சமூக ஆதரவு பற்றிய அதிகாரங்களின் விடய ஆழமின்மை பற்றி சுட்டிக்காட்டவும் தவறவில்லை. வலுவூட்டல் செயன்முறையில், முக்கியமாக வளர்முகநாடுகளில் சமூக ஆதரவுக்குரிய இடம்பற்றியும் Dr.சிவதாஸ் அவர்கள் விளக்கமளித்தார்கள்.



நிறுவனங்களினதும் திணைக்களங்களினதும் சகல பிரதிநிதிகளுக்கும் கைந்நூலின் பிரதிகள் இலவசமாக வழங்கப்பட்டதைத் தொடர்ந்து PETROவின் சார்பில் செல்வி சுமதியின் நன்றியுரையுடன் விழா முடிவடைந்தது.

இந்த அறிக்கை தயாரிப்பு : திரு.நவாஸ்,
CMHA, PETRO
(ஒழுங்கமைப்புக் குழுவின் சார்பில்)

### யாழ்ப்பாணம் மாவட்டம்

மாதாந்தரக் கூட்டங்கள். மாதத்தின் ஒவ்வொரு 3வது வியாழக்கிழமைகளில்
இடம்: RDHS அலுவலகம், யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு: Mr. கிருஷ்ணகுமார் - 021-2222278, 021-2223911
மின்னஞ்சல்: gkrish26@gmail.com

### மன்னார் மாவட்டம்

கூட்டங்கள் மாதாந்தம் இடம்பெறுகின்றது
இடம்: RDHS அலுவலகம் (சேவா லங்கா நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது.)
மாதாந்தரக் கூட்டங்கள்
தொடர்புகளுக்கு: Dr. சுஜாதா, ஆர் பிரிவு, மன்னார் பொது மருத்துவமனை 023-2222261
மின்னஞ்சல்: mannarpsyforum@gmail.com

### திருகோணமலை மாவட்டம்

சமூக வலுவூட்டல் வலையமைப்பு – (CENT), ருவாரங்களுக்கு ஒருதடவை (வெள்ளிக்கிழமைகளில் மு.ப. 10.00 மணிக்கு) இடம்பெறும்
இடம்: MH பிரிவு, திருகோணமலை பொது மருத்துவமனை
தொடர்புகளுக்கு: Mr ஆனந்தராசா - 0776014739
மின்னஞ்சல்: centcoord@gmail.com

### அம்பாறை மாவட்டம்

ஒவ்வொரு மாதமும் (மாதத்தின் கடைசி வியாழக் கிழமைகளில் காலை 10 மணிக்கு)
இடம்: RDHS மண்டபம், கல்முனை
தொடர்புகளுக்கு : Dr Nazeer - 077-3076205, 067-2222711
மின்னஞ்சல்: dpdhs-kal@sltnet.lk

### மொனறாகல மாவட்டம்

தொடர்புகளுக்கு : Mr. K.B றத்னாயக்க, வெலசற அபிவிருத்தி மன்றம், 055-2273857
மின்னஞ்சல்: kbrwelldev@sltnet.lk

### புத்தளம் மாவட்டம்

இடம்: மாவட்ட செயலக மாநாட்டு மண்டபம் (சைல்ட் விஷன் அனுசரணை வழங்குகின்றது)
(நேரம் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள உரியவர்களை அணுகவும்)
தொடர்புகளுக்கு :
தொலைபேசி: உளசமூக அலுவலகர் DCDC அலுவலகம், பிரதேச செயலகம் புத்தளம், 032-2265257
மின்னஞ்சல்: childvision@sltnet.lk

### அநுராதபுரம் மாவட்டம்

இடம்: மாவட்ட சிறுவர் அபிவிருத்தி மன்றம் (DCDC)(சைல்ட் விஷன் அனுசரணை வழங்குகின்றது)
(நேரம் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள உரியவர்களை அணுகவும்)
தொடர்புகளுக்கு : Ms. டினுஸா, உளசமூக அலுவலகர் DCDC அலுவலகம், பிரதேச செயலகம், அநுராதபுரம். Tel: 025-2222235
மின்னஞ்சல்: childvision@sltnet.lk

### வவுனியா மாவட்டம்

ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது செவ்வாய்க் கிழமைகளில் பிற்பகல் 2.30மணிக்கு கூட்டங்கள் இடம்பெறும்
இடம்: அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், வவுனியா
தொடர்புகளுக்கு : - 024-4589290
மின்னஞ்சல்: vanco@sltnet.lk

### மட்டக்களப்பு மாவட்டம்

இடம் : மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு
421, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு
தொடர்புகளுக்கு : Dr.K.அருளாநந்தம் - 065-2222267, 065-2222261
மின்னஞ்சல் : psfbatti@gmail.com

### அம்பாந்தோட்டை மாவட்டம்

தொடர்புகளுக்கு: Mr. றஞ்சன் பிறசன்ன, உளசமூக அலுவலகர், மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு, அம்பாந்தோட்டை 047-2220367
மின்னஞ்சல்: psfo-ham@cha.lk

### மாத்தறை மாவட்டம்

தொடர்புகளுக்கு: Ms.நிருக்க சந்தாறாணி, உளசமூக அலுவலகர், மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு, மாத்தறை 041-2231521
மின்னஞ்சல்: psfo-mtr@cha.lk

### காலி மாவட்டம்

தொடர்புகளுக்கு: Mr. சுபோதா கலுப்பே, உளசமூக அலுவலகர், மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு, காலி 091-2226477
மின்னஞ்சல்: psfo-gal@cha.lk


**ஆசிரியர் குழு**

திருமதி. நிஸன்ஸலா கமகே
உளசமூக மன்ற ஒருங்கிணைப்பாளர்
(CHA - கொழும்பு)

செல்வி. ஜூடித் ஜயரத்னம்
உளசமூக மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலகர்
(CHA - கொழும்பு)

Dr. T. கடம்பநாதன் - உளவியலாளர்
(சமூக வலுவூட்டல் வலையமைப்பு திருகோணமலை)

திரு. நிலங்க அபேசிங்க
நிகழ்ச்சித்திட்ட அலுவலகர் (VSO)


இந்தச் செய்திமடலில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஆக்கங்களுக்கு ஆசிரியர்குழு பொறுப்பல்ல என்பதையும், அது அவர்களின் தனிப்பட்ட கருத்துக்கள் என்பதையும் அறியத் தருகின்றோம்.

### உளசமூக மன்றம் – மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு

**நோக்கு**

இலங்கையில் உளசமூகத் துறையை முன்னேற்றுவதன் மூலம் அத்துறையைப் பலப்படுத்தி உளசமூக நன்னிலையை மேம்படுத்துவதே எமது தூரநோக்காகும்

**பணி**

தனி நபர்களின், அமைப்புக்களின்/ நிறுவனங்களின் உளசமூகப் பணியில் தரம், திறமை மற்றும் பொறுப்புக் கூறுதல் ஆகியவற்றை மேம்படுத்தலே எமது பணியின் இலக்காகும்.

**குறிக்கோள்**

இம்மன்றத்தின் குறிக்கோள்கள், வெளியீடுகள் மற்றும் செயற்பாடுகள் என்பன அவ்வப்பொழுது மன்றத்தினால் நடாத்தப்படும் முக்கிய திட்டமிடல் அமர்வுகளினால் நிச்சயிக்கப்படும்.

**மன்றத்தின் பணிகள்**

இது உளசமூகப் பணி தொடர்பான திறந்த கலந்துரையாடல்கள், முக்கிய நடவடிக்கைகள், ஒழுங்கமைக்கப்படும் செயற்பாடுகள் ஆகியன பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளல் என்பவற்றுக்கான மன்றமாக இயங்கி வருகிறது. மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் இவ் உளசமூக மன்றம் ஒத்த கரிசனைகளையும் கருத்துக்களையும் கொண்டுள்ள அங்கத்துவ அமைப்புக்களாலானது. உளசமூகப் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்காக உறுப்பினர்கள் காலத்துக்குக் காலம் கூடுகின்றனர். இம்மன்றம் உள்;ர் மற்றும் சர்வதேச அ.சா. நிறுவனங்கள் மத்தியில் உளசமூக நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய வலைப்பின்னலாக்கத்துக்கு உதவுகின்றது.

இலங்கையிலுள்ள மிகமுக்கியமான உளசமூகப் பிரச்சினைகள் பற்றிய உங்களின் கட்டுரைகளை நாங்கள் வரவேற்கின்றோம். எம்முடைய சமூகத்தில் ஊடுருவும் பிரச்சினைகளைக் கையாளுகின்ற ஒரு கருவியாக இந்தச் செய்தி மடலை நாம் பயன்படுத்துவோம்.


**இந்த வெளியீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு / ஆக்கங்களை அனுப்புவதற்குத் தொடர்பு கொள்ள வேண்டியது:**

**உளசமூக மன்ற ஒருங்கிணைப்பாளர் – PSF**
**மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு**
**86, றொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 07**